# மார்ச் 8 நடப்பு நிகழ்வுகள்

*(TNPSC, SSC, BANK, UPSC, RAILWAY)*

Visit Us - https:// tamil.examsdaily.in

Face book - ExamsDaily Tamil

## தமிழகம்

### ரூ.390 கோடியில் 82 புதிய திட்டங்கள்; ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் மாநாட்டில் அறிவிப்பு

- தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும் ரூ.390 கோடி மதிப்பிலான புதிய பாலங்கள், குடிநீர் திட்டங்கள் உள்ளிட்ட 82 திட்டங்களை மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர்கள் மாநாட்டில் முதல்வர் கே.பழனிசாமி அறிவித்தார்.

### சர்வதேச மகளிர் தினம் - 08.03.2018

- சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, திருப்பதி அருகே உள்ள சந்திரகிரி ரயில் நிலையம் பெண்களே நிர்வகிக்கும் ரயில் நிலையமாக உருவாக்கப்பட்டுள்ளது.
- இதனை தென் மத்திய ரயில்வே துறை பொது மேலாளர் வினோத்குமார் யாதவ் தொடங்கி வைத்தார்.

### 60 நாடுகள் பங்கேற்கின்றன மாமல்லபுரத்தில் ஏப்ரல் 11-ந்தேதி முதல் ராணுவ கண்காட்சி

- மாமல்லபுரத்தில் ஏப்ரல் 11-ந்தேதி தொடங்கும் ராணுவ கண்காட்சியில் 60 நாடுகள் தங்கள் அரங்குகளை அமைத்து ராணுவ தளவாடங்களை காட்சிப்படுத்துகின்றன.
- வங்க கடலுக்கு பல்வேறு நாடுகளின் போர்க்கப்பல்களும் வருகை தருகின்றன.
- இந்த ஆண்டு மந்திரி நிர்மலா சீதாராமன் முயற்சியால் முதன் முறையாக தமிழகத்தில் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது.

## இந்தியா

### வரலாறு படைத்த இந்தியர்

- இந்தியாவின் சிறந்த கட்டிடக்கலைஞர் பாலகிருஷ்ணா தோஷிக்கு நோபல் பரிசுக்கு இணையான கட்டிடக்கலையில் வழங்கப்படும் 'பிரிட்ஸ்கர்' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- உலகளவில் மிக உயரிய விருதாகக் கருதப்படும் நோபல் பரிசுக்கு இணையாக பிரிட்ஸ்கர் விருது கருதப்படுகிறது. கட்டிடக்கலையில் இந்த விருதைப் பெறும் முதல் இந்தியர் பாலகிருஷ்ணா(வயது90) என்பதும் குறிப்பிடத்தக்கது.
- இதற்கு முன் இந்த விருதை உலகின் சிறந்த கலைஞர்களான ஜாகா ஹாதித், பிராங்க் ஜெஹ்ரி, ஐஎம் பீ, ஷெங்கரு பான் ஆகியோர் பெற்றுள்ளனர்.

## கவுரவக் கொலைகளை குற்றமாக கருத புதிய சட்டம்: உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல்

- திருமண உறவுக்கான சுதந்திரத்தில் பிறரின் தலையீட்டை தடுக்க வகை செய்யும் புதிய சட்டம் இயற்றப்பட உள்ளது.
- கவுரவக் கொலைகளை திட்டமிட்ட குற்றச் செயலாக கருதும் இச்சட்டம் விரைவில் கொண்டுவரப்படும்.

## நாகலாந்து முதல்வராக நிபீயோ ரியோ பதவியேற்றார்

- நாகலாந்து மாநிலத்தின் முதல்வராக தேசிய ஜனநாயக முற்போக்கு கட்சியின் தலைவர் நிபீயோ ரியோ அம்மாநில ஆளுநர் பி பி ஆச்சார்யா முன்னிலையில் பதவியேற்றார்.
- பாஜக கட்சியுடன் கூட்டணி அமைத்து ஆட்சியை அமைத்துள்ள நிபீயோ ரியோ நான்காவது முறையாக அம்மாநில முதல்வராக பதவியேற்றுள்ளார்.

## டெல்லி விமான நிலையம் தரமான சேவை வரிசை பட்டியலில் உலகில் முதலிடம்

- சர்வதேச விமான நிலைய கவுன்சில், சர்வதேச அளவில் பரப்பளவு மற்றும் பயணிகள் வந்து செல்லும் விகிதத்தின் அடிப்படையில், விமான நிலையங்களின் சேவைத் தரத்தினை ஆண்டுதோறும் ஆராய்ந்து வருகிறது.
- அதன்படி, இந்த ஆண்டுக்கான தரவரிசைப்பட்டியலை அந்த கவுன்சில் வெளியிட்டுள்ளது.

- இந்தப் பட்டியலில் டெல்லி இந்திராகாந்தி விமான நிலையம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

## உலகம்

### ஆங் சான் சூச்சிக்கு வழங்கப்பட்ட விருதை ரத்து செய்தது அமெரிக்க அருங்காட்சியகம்

- மியான்மர் நாட்டுத் தலைவர் ஆங் சான் சூச்சிக்கு வழங்கப்பட்ட விருதை அமெரிக்க அருங்காட்சியகம் ரத்து செய்தது.
- அமெரிக்காவின் ஹோலோகாஸ்ட் மெம்மோரியல் அருங்காட்சியகம் கடந்த 2012-ம் ஆண்டு சூச்சிக்கு எல்லி வெய்ஸல் (Elie Wiesel) என்ற உயரிய விருதினை வழங்கியது.
- இந்நிலையில் அவருக்கு வழங்கப்பட்ட அந்த விருதினை ரத்து செய்வதாக அருங்காட்சியகம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

### உலக சிறுநீரக தினம்

- சிறுநீரக நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த, உலகம் முழுவதும் ஆண்டுதோறும் மார்ச் - 8, உலக சிறுநீரக தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

## வணிகம்

### பிரைவேட் ஈக்விட்டி முதலீடு பிப்ரவரியில் 60 சதவீதம் சரிவு

- பிப்ரவரி மாத பிரைவேட் ஈக்விட்டி மற்றும் வென்ச்சர் கேபிடல் முதலீடு 60 சதவீதம் வரை சரிந்திருக்கிறது.
- மார்ச் மாதத்தில் மொத்தம் 63 முதலீடுகள் மூலம் 140 கோடி டாலர் முதலீடுகள் வந்துள்ளன.
- மிகப்பெரிய முதலீடுகள் இல்லாததே காரணம் என இஒய் நிறுவனத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

## விளையாட்டு

### அஸ்லான் ஷா ஆக்கி: இந்திய அணி முதல் வெற்றி

- 6 அணிகள் பங்கேற்றுள்ள 27-வது சுல்தான் அஸ்லான் ஷா கோப்பை ஆக்கி போட்டி மலேசியாவின் இபோக் நகரில் நடந்து வருகிறது.
- தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய இந்தியா 5-1 என்ற கோல் கணக்கில் பந்தாடியது.
- லக்ரா(10-வது நிமிடம்), குர்ஜந்த் சிங் (42 மற்றும் 57-வது நிமிடம்), சுமித் குமார் (48-வது நிமிடம்), ரமன்தீப்சிங் (51-வது நிமிடம்) ஆகியோர் இந்திய அணியில் கோல் போட்டனர்.

---***---